| பாடக் குறியீடு | பாட தலைப்பு | திறமை |
|---|---|---|
| | **வருடம் I – பருவம் I** | |
| **BBA 11012(F)** | பொது ஆங்கிலம் - I | 2 |
| **BBA 11022(F)** | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் | 3 |
| **BBA 11033(c)** | முகாமைத்துவ தத்துவங்கள் | 3 |
| **BBA 11043(C)** | நுண்பாக பொருளியல் | 3 |
| **BBA 11052(F)** | வியாபார கணிதவியல் | 2 |
| **தெரிவு** | | |
| **BBA 11052(S)** | மென்நுட்பமும் தொழில் விருத்தியும் | 2 |
| **BBA 11072(S)** | வாழ்கைகான உளவியல் | 2 |
| | **மொத்தம்** | 15 |
| | **வருடம் I – பருவம் II** | |
| **BBA 12083(C)** | நிதி கணக்கியல் | 3 |
| **BBA 12093(F)** | வியாபார புள்ளி விபரவியல் | 3 |
| **BBA 12102(C)** | பொது ஆங்கிலம்-II | 2 |
| **BBA 12113(C)** | பெரும்பாக பொருளியல் | 3 |
| **BBA 12113(C)** | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் | 2 |
| **தெரிவு** | | |
| BBA12132 | வியாபார சூழல் | 2 |
| **BBA 12123(C)** | இன நல்லிணக்கமும் சமூக இணக்கப்பாடும் | 2 |
| | **மொத்தம்** | 15 |
| | **வருடம் II – பருவம் I** | |
| **BBA 21153(C)** | முழுதர முகாமைத்துவம் | 3 |
| **BBA 21163(C)** | மனிதவள முகாமைத்துவம் | 3 |
| **BBA 21172(C)** | முகாமைத்துவ தகவல் தொழில்நுட்பம் | 2 |
| **BBA 21183(C)** | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | 3 |
| BBA21192 | நிதி முகாமைத்துவம் | 2 |
| **தெரிவு** | | |
| **BBA 21202(S)** | நிதி அறிக்கையியல் | 2 |
| **BBA 21112(E)** | வங்கியலும் நிதியும் | 2 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் II – பருவம் II** | |
| **BBA 22223(C)** | செயற்பாட்டு முகாமைத்துவம் | 3 |
| **BBA 22233(C)** | கிரயக் கணக்கியல் | 3 |
| **BBA 22242(C)** | முயற்சியாண்மை அபிவிருத்தி | 2 |
| **BBA 22253(C)** | முகாமைத்துவத்திற்கான கணித நுட்பம் | 3 |
| **BBA 22262(E)** | வியாபாரச் சட்டம் | 2 |
| **தெரிவு** | | |
| **BBA 22272(E)** | பொது உறவு மற்றும் வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம் | 2 |
| **BBA 22282(E)** | கணனிமையக் கணக்கியல் | 2 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் III – பருவம் I** | |
| **BBA 31293(C)** | தந்திரோபாய முகாமைத்துவம் | 3 |
| **BBA 31302(C)** | முகாமைப் பொருளியல் | 2 |
| **BBA 31313(C)** | முதலீட்டு கூட்டுமுகாமைத்துவம் | 3 |
| **BBA 31323(C)** | முகாமைத்துவ கணக்கியல் | 3 |
| **BBA 31332(E)** | நிறுவன மாற்றமும் அபிவிருத்தியும் | 2 |
| **தெரிவு** | | |
| **BBA 31342(E)** | சர்வதேச வர்த்தகம் | 2 |
| **BBA 31352(E)** | தொழில் உழவியல் | 2 |
| | **மொத்தம்** | **15** |
| | **வருடம் III – பருவம் II** | |
| **BBA 32363(C)** | செயற்பாட்டு முகாமைத்துவம் | 3 |
| **BBA 32373(C)** | நிறுவன நடத்தை | 3 |
| **BBA 32383(C)** | கணக்காய்வு | 2 |
| **BBA 32343(C)** | வரியியல் | 3 |
| **BBA 32402(C)** | சேவை சந்தைப்படுத்தல் | 2 |
| **தெரிவு** | | |
| **BBA 32412(S)** | முகாமைத்துவ தொடர்பாடலும் தலைமைத்துவமும் | 2 |
| **BBA 32422(S)** | ஆளணி பாதுகாப்பும் சமூக பொறுப்பும் | 2 |
| | **மொத்தம்** | **15** |

## கட்டணங்கள்

| விபரம் | தொகை ரூபா. |
|---|---|
| **விண்ணப்ப செயற்படுத்தல்** | **1,000.00** |
| **முதல் வருடம்** | **40,000.00** |
| **இரண்டாம் வருடம்** | **36,000.00** |
| **மூன்றாம் வருடம்** | **30,000.00** |

- ஒரு வருடத்துக்கான கட்டணம் இரண்டு தவணைகளில் செலுத்த முடியும்.
- கட்டணங்கள் பதிவுக் கட்டணம், பரீட்சை கட்டணம், கருத்தரங்குக் கட்டணம் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.
- மீள் பரீட்சையின் போதும், மீள்பதிவு செய்யும் போதும் கட்டணங்கள் அறவிடப்படும்.

**குறிப்பு:** இக்கையேட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்களை மாற்றும் அதிகாரம் பல்கலைக்கழகக்கிற்கு உரித்தாகும்.

## தொடர்புகளுக்கு:


**பணிப்பாளர்,**
**வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும்**
**தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்**
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக பூங்கா
ஒலுவில்-32360
இலங்கை

Tel : +94 67 20 52801
Email: cedpl@seu.ac.lk
www.seu.ac.lk


# வியாபார நிர்வாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டம்

# BBA (Gen). External

## 2014/2015




**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**
**வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்**

## அறிமுகம்

வியாபார நிர்வாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டமானது கணக்கியல், நிதி, பொருளாதாரம், முகாமைத்துவம், மற்றும் வணிக சூழல் ஆகிய பாடநெறிகளை ஒருங்கிணைத்ததாக காணப்படுகிறது. இப்பாடத்திட்டமானது இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் முகாமைத்துவ பகுதியினால் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்துடன் (CEDPL) ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

இப்பாடத்திட்டமானது முகாமையாளர்களின் தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பரந்த பயிற்சிகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. வியாபார நிர்வாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பினை அமுல்படுத்துவதற்கான பிரதான நோக்கம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தகுதி பெற்ற, கல்விசார் ஏனைய தகைமைகளையும் இலங்கை பல்கலைக்கழக முறைமையின் கீழ் உள்வாரிபட்டப் படிப்பினை தொடர வாய்ப்பிழந்த மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதாகும்.



### அனுமதிக்கான தேவைப்பாடுகள்

**வியாபார நிர்வாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்க்கான குறைந்தபட்ச தகுதி பின்வரும் அடிப்படைகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது மூன்று (3) பாடங்களில் ‘S’ தரத்திலான சித்தியினை பெற்றிருப்பதுடன் பொது சாதாரண பரீட்சையில் குறைந்தது 30 புள்ளிகளை அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் தீர்மானிப்பட்ட Z புள்ளியினை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா தரம் (II) அல்லது முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா தரம் (II) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் பெறப்பட்டது.

**அல்லது**

இலங்கை தொழிநுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய வணிக சான்றிதழ் பாடநெறி (இரண்டு வருட பாடநெறி)

**அல்லது**

இலங்கை தொழிநுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் அல்லது கல்வி அமைச்சின் மேலதிக கற்கை நிறுவனத்தினால் வழங்கப்படும் வணிகத்தில் கணக்குப் பதிவாளர்களுக்கான உயர் சான்றிதழ்

**அல்லது**

கல்வி பொதுத் தராதர சாதாரண தரத்துடன் CIMA Stage – II, அல்லது Chartered (CASL) Stage – II. அல்லது AAT இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செனட் சபையால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது தகைமை.

**மற்றும்**

அவசியம் ஏற்படுமிடத்து இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தினால் நடாத்தப்படும் தெரிவுப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் திருப்திகரமான புள்ளியினை பெற்றிருத்தல்.

### வியாபார நிர்வாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான அனுமதி மற்றும் பதிவு செய்வதற்குமான விலக்களிப்பு

கீழ்வரும் ஏதாவது ஒரு தகைமையினைக்கொண்ட மாணவர்கள் வியாபார நிர்வாகமாணி முதலாவது பரீட்சையில் விலக்குப் பெற்று வியாபார நிர்வாகமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு தன்னை பதிவு செய்து கொள்ள முடியும்.

- இலங்கை உயர் தொழிநுட்பக் கல்வி நிறுவகத்தினால (SLIAT) வழங்கப்படும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா HNDA, முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா HNDM

**அல்லது**

- இலங்கை பல்கலைக்கழகங்களில் வர்த்தகமாணி அல்லது வியாபாரமாணி அல்லது பொது நிருவாக மாணியின் முதலாவது பரீட்சையினை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்

### காலம்

- **வியாபார நிர்வாகமாணி** (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பானது மூன்று கல்வியாண்டைக் கொண்ட கற்கை நெறியாகும். இது ஆறு பருவ காலங்களை கொண்டதாகக் காணப்படும்.
- ஒரு பருவகாலம் 22 வாரங்களைக் கொண்ட கல்வி நடவடிக்கைகளை உள்ளடக்கும். இதனுள் பருவகால இறுதிப் பரீட்சையும் உள்ளடக்கப்படும்.

### மொழி மூலம்

தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலமாக விரிவுரைகள் நடாத்தப்படும். மாணவர்கள் தங்களது விருப்பத்திற்கேற்ப ஏதாவது ஒரு மொழியினை மாத்திரம் தெரிவு செய்து கொள்ள முடியும்.

### கற்கை நெறியின் நெகிழ்ச்சித் தன்மை

**வியாபார நிர்வாகமாணி** (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கு தன்னை பதிவு செய்துகொள்ளும் மாணவர்கள் பல்வேறுபட்ட மட்டங்களில் வெளியேற முடியும். இப்பாடத்திட்மானது மாணவர்களின் சௌகரியத்திற்கும், தேவைப்பாடுகளுக்கும் ஏற்ப நெகிழ்ச்சியானதாக வடிவமைக்கப் பட்டுள்ளது.

ஏதேனும் காரணமாக மாணவர்கள் இக்கற்கையினை பூரணமாக பூர்த்தி செய்ய முடியாவிட்டால் அல்லது இடைநிறுத்த விரும்பினால் பின்வரும் சான்றிதழ்களைப் பெற இயலுமானதாக இருக்கும்.

i. **வியாபார நிர்வாகமாணி** சான்றிதழ் (Certificate in Business Administration ) - முதலாவது வருட கற்கையினை வெற்றிகரமாக பூரணப்படுத்தும்போது

ii. **வியாபார நிர்வாகமாணி** டிப்ளோமா (Diploma in Business Administration) - இரண்டாவது வருட கற்கையினை வெற்றிகரமாக பூரணப்படுத்தும்போது.

### கற்பித்தல் முறை

பொருத்தமான பாட கைநூல்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு பருவ கால ஆரம்பத்திலும் அனைத்து மாணவர்களும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் பாடநெறியானது சுய கற்கை முறையுடையதாகக் காணப்படும். இருப்பினும் பீடமானது ஒவ்வொரு பாடத்திற்க்கும் ஆகக்குறைந்தது இரண்டு நேரடி சந்திப்பு மூலமான விரிவுரைகளையும் ஏற்பாடு செய்யும்.

அடுத்த கல்வியாண்டிலிருந்து அனைத்து பாட கை நூல்களும் Moodle கற்றல் முகாமை முறைமை (LMS) ஊடாக பதிவேற்றம் செய்யப்படும்.